1989 மே 4]

விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டால் சேலம் மாவட்டம், பாலமலைப் பகுதியில் பழங்குடி மக்கள் மேம்பாட்டு துணைத் திட்டப் பகுதியாக அறிவிக்கப் படுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலமலைப் பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டப் பகுதியாக இல்லாவிட்டாலும் அப்பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு உரிய வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குறைகள் ஏதாவது இருந்தால் அது பற்றி விவரமறிந்து, அதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

மாநில ஆதி திராவிடர் நலக் கமிட்டி.

205—(*வினா எண். 1413) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பல ஆண்டு காலமாக மாநில ஆதி திராவிடர் லக் கமிட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கமிட்டி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம.

(ஆ) மாநில அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கோள்ளப்பட்டுள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக இந்தக் கமிட்டி அமைக்கப்படவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவாவது இந்த கமிட்டி அமைக்கப்படுமா? இதற்கு முந்தைய கேள்வியின்போதே நான் கையைத் ... தூக்கிக் கொண்டே இருக்கும்போது மாண்புமிகு தலைவர் அவர்கள் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள். மரபை எல்லாம் மீறக் கூடாது. நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். நான் கேள்வியை முடிக்கப் போகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஆகவே இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவடைவதற்குள்ளாக அமைக்கப்படுமா என்பதையும், அவ்வாறு அமைத்து அது அறிவிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமி டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலான ஆதி திராவிடர் நலக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 206, 207 மற்றும் 208 ஆகியவை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தின் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் பணிக்குழுக்களில் இடம் பெறுவோர் குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியுடன் ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திதிற்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறைத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பயன்பெறும் பயனீட்டாளர்களின் — அதாவது பெனிபீஷியரீஸ் — பெயர்ப் பட்டியலைத்